# மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.

முன்னிலை: **திரு.பா.சரவணன், பி.எஸ்.சி., பி.எல்.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள் திங்கட்கிழமை

**இ.பி. எண்.67/2025 ல்**

**ஏசிபி வழக்கு எண்.1409/2022**

1. M/s சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட்ஸ்,
பைனான்ஸ் லிமிட்டேட், துறையூர்,
அதன் சார்பாக
ஏரியா சட்ட மேலாளர்
K.A.கண்ணன். ... மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர்

/எதிர் /

V.பாபு,
த/பெ வரதராஜ் ... 1ம் எதிர்மனுதாரர்/தீர்ப்புக்கடனாளி

இம்மனு, கடந்த 05.03.2026 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.முகமதுரபீக் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர்/ தீர்ப்புக்கடனாளி நீதிமன்றத்தில் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாத்தரப்பாளர்களாக்கப்பட்டும், மனு மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், மனுதாரர் தரப்பு வாதவுரைகளைக் கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

## <u>உத்தரவு</u>

1. இந்த நிறைவேற்று மனுவானது மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவரால் தீர்ப்பாணை தொகையுடன் வட்டி சேர்த்து வரும் ரூ 31,09,420/– தொகையை, பின்வட்டி மற்றும் செலவுத்தொகையுடன், 1ம் எதிர்மனுதாரர்/ தீர்ப்புக்கடனாளியிடம் வசூலித்துத் தரக் கோரியும், தவறும்பட்சத்தில் 1ம் எதிர்மனுதாரரை சிவில் சிறையில் அடைக்க உத்தரவிடக் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர்/ தீர்ப்புக்கடனாளி, மனுதாரர் நிறுவனத்தில் பெற்ற கடன் தொகையை வசூலிக்கக் கோரி மனுதாரர்கள் இசைவு தீர்ப்பாய மனுவை தாக்கல் செய்து, மேற்படி தீர்ப்பாய மனுவில் 1ம் எதிர்மனுதாரர் கடன் தொகையை பின் வட்டியுடன், வழக்கு செலவுத்தொகையுடன் செலுத்த உத்தரவிட்டு 13.08.2022 அன்று தீர்வம் வழங்கப்பட்டது. மேற்படி தீர்ப்பை நிறைவேற்றுவதற்கு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், 1ம் எதிர்மனுதாரர், மனுதாரர் நிறுவனத்திற்கு பின்வட்டியுடன் செலுத்த வேண்டிய தொகை ரூ.31,09,420/– என்றும், மேற்படி தீர்வத்தொகையை செலுத்தக் கூடிய வசதி அவருக்கு உண்டு என்றும், அவர் தங்களது நிறுவனத்தை ஏமாற்ற வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் மேற்படி தீர்வத்தொகையை செலுத்தாமல் இருந்து வருவதாகவும், எனவே, மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மனுப்படி உத்தரவாக வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

3. 1ம் எதிர்மனுதாரர்/தீர்ப்புக்கடனாளி நீதிமன்றத்தில் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் 16.10.2025 அன்று நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு, தோன்றாத்தரப்பினராக்கப்பட்டுள்ளார்.

4. மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவருக்கு மனுவில் கோரியவாறு பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

5. இந்த மனுவின் மனுதாரர், 1ம் எதிர்மனுதாரருக்கெதிராக தீர்வத் தொகையை வசூலிக்கக் கோரி, இசைவு தீர்ப்பாயரிடம் மனு தாக்கல் செய்து, அதில், 13.08.2022 அன்று தீர்வம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் அதன் சட்ட அலுவலரான கண்ணன் என்பவர் ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவரது தரப்பில் 13.08.2022 தேதியிட்ட தீர்ப்பாணை மற்றும் Special power of Attorny ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரருக்கு தீர்வத்தொகையை செலுத்த ரூ.10,00,000/- மதிப்புள்ள அசையா சொத்துக்களும், ரூ.5,00,000/- மதிப்புள்ள அசையும் சொத்துக்களும், ரூ. 3 இலட்சம் கையிருப்பும் உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. அவரை எதிர்மனுதாரர்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவில்லை. மேலும், 1ம் எதிர்மனுதாரர்/தீர்ப்புக்கடனாளி நீதிமன்றத்தில் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்யாமல் தோன்றாத்தரப்பாளராக்கப்பட்டுள்ளார். எனவே, தீர்வத்தொகையை செலுத்த 1ம் எதிர்மனுதாரருக்கு போதிய வசதி வாய்ப்பு இருந்தும் அதை செலுத்தாமல் இருந்துள்ளார் என்பது மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த நிறைவேற்று மனு அனுமதிக்கத்தக்கது தான் என முடிவு செய்யப்படுகிறது.

6. <u>முடிவாக</u>

இந்த மனு பின்வருமாறு அனுமதிக்கப்படுகிறது.

மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவருக்கு 13.08.2022 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்வத்தின் அடிப்படையில், திரும்ப செலுத்த வேண்டிய தொகையை திரும்பச் செலுத்த, ம.சா.1 சாட்சியத்தின் அடிப்படையில், 1ம் எதிர்மனுதாரர்/ தீர்ப்புக்கடனாளிக்கு, போதிய வருமானமும், வசதி வாய்ப்பும், ரொக்க கையிருப்பும் இருந்தும், அதை திரும்பச் செலுத்தாததால், 1ம் எதிர்மனுதாரர்/தீர்ப்புக் கடனாளியை அடுத்த வாய்தாவிற்குள் கைது செய்து ஆஜர் செய்ய உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க வாய்தா 17.04.2026. Batta in 3 days.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எடுக்கப்பட்டு, பின்னர் விரிவாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

SARAVANAN B
Digitally signed by SARAVANAN B
Date: 2026.03.23 16:02:13 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**